மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பது 800 ரூபாய் என்று சொன்னார்கள். அதற்குமேலே நாங்கள் விலையை நிர்ணயித்து இருக்கிறோம். 1,425 ரூபாய் ஒரு வகை –– அதிலே 4 வகைகளாக நாங்கள் பிரித்துத் தந்திருக்கிறோம். 1,235, 1,020 போன்ற விலையிலே நாங்கள் விற்றுக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு)

முற்பகல் 10.10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு துணைக் கேள்விகள்தான். நீங்கள் முதலிலே கேட்கும்போதே இந்தக் கேள்விகளையெல்லாம் சேர்த்திருக்க வேண்டும்.

வினா எண் 326, திரு த. ரத்தினவேல், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

326—

திருவெறும்பூருக்குப் பேருந்து இயக்குதல்

*36004—**திரு. த. ரத்தினவேல்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி சந்திப்பிலிருந்து பொன்மலை ஆர்மரிகேட் ஆயில்மில் வழியாக திருவெறும்பூருக்கு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே.ஏ.செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோரிக்கை வழித்தடப்பகுதி முழுமையும் பேருந்து வசதி பெற்ற பகுதியாகையால் தற்போது புதியதாக நகரப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.

1995 ஏப்ரல் 18]

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து நேரிடையாக அதிகமான பேருந்துகள் திருவெறும்பூருக்கும், அதற்கு அப்பால் இருக்கின்ற பகுதிகளுக்கும் செல்கின்றன. ஆனால், பொன்மலை ரயில்வே ஆர்மரிகேட்டிலிருந்து நேரிடையாக திருவெறும்பூருக்கோ, துப்பாக்கி தொழிற்சாலைக்கோ இல்லை என்பதை தெரிவித்துக்கொண்டு, இதைப் பரிசீலனை செய்து பேருந்து விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இடத்திலே பேருந்துகள் இல்லையென்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இவர் குறிப்பிடுகின்ற பல்வேறு இடங்களுக்கு இன்றைக்கு பல்வேறு பேருந்துகள் பல்வேறு வழிகளிலே நாம் இயங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற வழியே வேறு. ஆகவே, அதை அரசு பரிசீலித்து மிக விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மலையிலிருந்து பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பி.எச்.இ.எல்., பிராந்திய பொறியியல் கல்லூரி மாணவர்கள், அரசு தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், ஐ.டி.ஐ. போன்ற கல்வி நிறுவனங்களிலே படிக்கின்ற மாணவ மாணவியர்கள் தினந்தோறும் அவர்கள் இந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டுமானால், திருச்சி ஜங்ஷனுக்கு வந்து இன்னொரு பஸ் மாறி செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, இந்தப் பகுதி மக்களுடைய நீண்டகால பிரச்சினையாக இருக்கின்ற இந்தப் பிரச்சினையை மாண்புமிகு பொற்கால முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே மறுபரிசீலனை செய்து நிறைவேற்றித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மலையிலிருந்து பல்வேறு வழித்தடங்களிலே நாம் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சியிலிருந்து நேரிடையாக பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஒப்பற்றத் தலைவியாக இருக்கின்ற இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு பணிவோடு பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.